Vol.22 | No. 6 | June 2018



The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

# KKSSS
## Educare CAMP
## SPARK
## 2018






VBS - ST. MICHAEL'S KATTATHURAI - 05.05.2018



VBS - ST. GEORGE'S MUNCHIRAI - MAY



VBS - CHRIST THE KING, PALAPALLAM - 13.05.2018

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 22 No : 6 June 2018

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைக்கல்வி | 05 |
| Birthdays and Feastdays | 06 |
| சிறுமலர் இயக்கம் | 07 |
| வின்செண்ட் தே பவுல் | 09 |
| இளையோர் இயக்கம் | 10 |
| சமூக சேவை சங்கம் | 15 |
| இல்வாழ்வு இயக்கம் | 17 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 18 |
| மறைவட்டச் செய்திகள் | 19 |

*Editorial Board*

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**

Chief Editor
**Fr. Joseph Santhosh**

Executive Editor
**Mr. Soundara Raj**

Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop’s House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
*Diocese of Thuckalay*

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/82/2018 31 May 2018

Dears,

Loving greetings from Chicago, USA! My mission appeal on behalf of our Eparchy is going on well and I am able to meet some of the Syro-Malabar communities in the US. I request your continued prayers for the success of my mission.

We are entering the month of June, a month dedicated to the Sacred Heart of Jesus. In this Circular Letter, I want to share with you some thoughts on the need to inculcate filial devotion to the Sacred Heart of Jesus. In the Catechism of the Catholic Church, we read: "[Jesus] has loved us all with a human heart. For this reason, the Sacred Heart of Jesus, pierced by our sins and for our salvation, is quite rightly considered the chief sign and symbol of that… love with which the divine Redeemer continually loves the eternal Father and all human beings' without exception" (#478).

To appreciate the rich symbolism of the heart, we must remember that in Judaism the word heart represented the core of the person. While recognized as the principle life organ, the heart was also considered the centre of all spiritual activity. Here was the seat of all emotion, especially love. As the psalms express, God speaks to a person in his heart and there probes him. This notion of the heart is clear when we read Deuteronomy 6:5-6: "Therefore, you shall love the Lord, your God, with all your heart, and with all your soul, and with all your strength. Take to heart these words which I enjoin on you today."

The heart has even greater depth when contemplated in the light of incarnation. We believe that Jesus Christ, second person of the Holy Trinity and consubstantial with the Father, entered this world taking on our human flesh - true God became also true man. While Jesus' heart obviously served a physiological function, spiritually his Sacred Heart also represents love: the divine love Our Lord shares with the Father and Holy Spirit in the Trinity; the perfect, divine love which God has for us; and the genuine human love Christ felt in his human nature. One of the most consoling passages of the Gospels is the invitation of Jesus: "Come to me, all you who are weary and find life burdensome, and I will refresh you. Take my yoke upon your shoulders and

learn from me, for I am gentle and humble of heart. Your souls will find rest, for my yoke is easy and my burden light" (Matthew 11:28-30). Therefore, while meditating on the Sacred Heart of Jesus, we are called upon to share in the love of Jesus and strive to express our own genuine love for God, for ourselves and for our neighbours.

Throughout the Gospels, we see the outpouring of Jesus' love from his heart, whether in the miracle stories or in the incidents of reconciliation of sinners or in his compassion for the grieving. Even on the cross, Jesus poured out his love for us. When the soldier's lance pierced his side, blood and water flowed out (John 19:34). According to St Bonaventure, the Church was born from the wounded side of the Lord with the blood and water representing the Sacraments of the Holy Eucharist and Baptism.

The early Church Fathers clearly cherished this meaning of the Sacred Heart of Jesus. St Justin the Martyr, in his Dialogue with the Jew Trypho, said: "We Christians are the true Israel which springs from Christ, for we are carved out of his heart as from a rock." Likewise, St Irenaeus of Lyons said: "The Church is the fountain of the living water that flows to us from the Heart of Christ." St Paulinus of Nola in his Letters wrote: "John, who rested blissfully on the breast of our Lord, was inebriated with the Holy Spirit, from the Heart of all creating Wisdom he quaffed an understanding which transcends that of any creature." Although these are just a few brief examples from the times of the early Church, we find a profound respect for the Sacred Heart of Jesus as a font of his love, which gave birth to the Church and continues to nourish its members.

The devotion to the Sacred Heart of Jesus continued to grow during the Middles Ages. In 1353, Pope Innocent VI instituted a Mass honouring the mystery of the Sacred Heart. During the age of the Protestant movement, devotion to the Sacred Heart was practised in the hope of restoring peace to a world shattered by political and religious persecution.

Shortly thereafter, the devotion escalated due to the fervour surrounding the apparitions of our Lord to St Margaret Mary Alacoque (1647-90). On 27 December 1673, Jesus revealed to her: "My Divine Heart is so passionately inflamed with love... that, not being able any longer to contain within Itself the flames of Its ardent charity, It must let them spread abroad through your means, and manifest Itself to man, that they may be enriched with Its precious treasures which I unfold to you, and which contain the sanctifying and salutary graces that are necessary to hold them

back from the abyss of ruin." The four apparitions provided the catalyst for the promotion of the devotion to the Sacred Heart. A feast day in honour of the Sacred Heart was instituted. The practice of attending mass and receiving Holy Communion on nine consecutive first Fridays of the month became popular.

In 1899, Pope Leo XIII consecrated the world to the Sacred Heart of Jesus. Since then, his successors have exhorted the faithful to turn to the Sacred Heart and make acts of personal consecration. They have also requested the faithful to offer prayers and penances to the Sacred Heart in reparation for the many sins of the world. Considering our present day and age, the temptations and sins of this world, the growing apathy and secularism, we too should turn again in loving devotion to the Sacred Heart of Jesus and ask him to pour forth his grace. We must strive to make our hearts like his own, for he said, "Blessed are the pure of heart, for they shall see God" (Matthew 5:8).


During this month dedicated to the Sacred Heart of Jesus, let us make every effort to promote various popular devotions to the Sacred Heart of Jesus among our people. Let us also pray earnestly to the Heart of Jesus for more vocations to priestly and religious life in our Eparchy.

CONCLUSION

Today we celebrate the feast of the Visitation of our Blessed Mother to St Elizabeth. Narrating this incident, St Luke tells us that Mary "went with haste" (Lk 1:39) to meet St Elizabeth. This anxiety to visit her cousin indicates her wish to be of assistance to her during her pregnancy, but above all her desire to rejoice with her at a time when salvation has come to her. In Mary's visitation, we find fulfilment of the hopes and expectations of the humble, God-fearing people who were awaiting the fulfilment of the prophetic promises. Like Mary, we too are called upon, as pastors of souls, to make frequent visits to our people in order to bring them the salvation that Our Lord has wrought for us. Let us ask our heavenly mother to come to our aid in moments of problems and anxieties.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,



+George Rajendran SDB

Bishop of Thuckalay



# CATECHISM மறைக்கல்வி

> "என் பிள்ளையே, என் வார்த்தைகளை மனதில் இருத்து, என் கட்டளைகளை செல்வமென போற்று. என் கட்டளைகளை கடைப்பிடி நீ வாழ்வடைவாய்,என் அறிவுரைகளை உன் கண்மணி போல் காத்துக்கொள்வாய்" (நீமொ 7:12)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

**இரண்டாம் பருவத் தேர்வு**

வகுப்பு 1 முதல் 9 வரையுள்ள மாணவர்களுக்கான இரண்டாம் பருவத் தேர்வு ஏப்ரல் 8 ஞாயிற்றுக்கிழமை அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது. வகுப்பு 10, 11, 12 ஆகிய மாணவர்களுக்கான இரண்டாம் பருவத் தேர்வு ஏப்ரல் 22 ஞாயிற்றுக்கிழமை அந்தந்த மறைவட்டங்களில் வைத்து பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை நடைபெற்றது.

**விசுவாசப் பயிற்சி விழா (வி.பி.வி)**

விசுவாசப் பயிற்சி விழா (வி.பி.வி) எல்லா பங்குகளிலும் மிகச் சிறப்பாக நடத்தும் நோக்குடன் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்களுக்கு வி.பி.வி பயிற்சி அளிக்கப்படுகிறது. அவ்வண்ணமாய் இவ்வருடமும் ஆசிரியர்களுக்கான வி.பி.வி பயிற்சி கருத்தரங்கு ஏப்ரல் 27, 28 ஆகிய 2 நாட்கள் புனித மிக்கேல் மெட்ரிக்குலேசன் உயர்நிலைப் பள்ளி காட்டாத்துறையில் வைத்து நடைபெற்றது. ஆசிரியர்களுக்கான வி.பி.வி பயிற்சியின் தொடக்க விழாவானது ஏப்ரல் 27 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் தக்கலை மறைமாவட்டத்தின் பொருளர் பேரருட்தந்தை டென்சி முண்டநடைக்கல் அவர்கள் குத்துவிளக்கேற்றி வி.பி.வி பயிற்சி விழாவை தொடங்கி வைத்தார். இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட் அவர்கள் பயிற்சிக்கு வருகை தந்த அருட்தந்தையர்களையும், தலைமையாசிரியர்களையும் மற்றும் ஆசிரியர்களையும் வரவேற்றார். அருட்சகோதரர்கள் டோஜி, றோபின் ஆகியோர் தலைமையில் நமது மறைமாவட்ட அருட் சகோதரர்கள் விசுவாசப் பயிற்சியை திட்டமிட்டு தகுந்த தயாரிப்புடன் ஆடல், பாடல்கள் மற்றும் விளையாட்டு வழியாக மேன்மைப்படுத்தினார்கள். சப் ஜூனியர், ஜூனியர், சீனியர், சூப்பர் சீனியர் ஆகிய நான்கு பிரிவுகளுக்கும் தனித்தனியே அருட்தந்தையர்கள் ஜெபனேஷ், வினு, ஜாண் ஜோசப் அவர்களும் மிகச் சிறப்பாக வகுப்புகள் நடத்தினர். இப்பயிற்சியில் சுமார் 200 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்கள். பயிற்சியில் கலந்துக்கொண்ட ஆசிரியர்களுக்கு பாடநூல், தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

**போட்டித்தேர்வு**

வகுப்பு 3 முதல் 9 வரை உள்ள மாணவர்களுக்கான போட்டித்தேர்வு ஏப்ரல் 29 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமூட்டில் வைத்து பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை நடைப்பெற்றது. 70% மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்கள் சுமார் 350 பேர் இப்போட்டித் தேர்வில் பங்கு பெற்றனர்.

**ஊக்குவிப்பாளர்களின் கூடுகை**

ஊக்குவிப்பாளர்களின் கூடுகை மே 26 சனிக்கிழமை அன்று 4.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. புதிதாக பொறுப்பேற்கும் பேரருட்தந்தை சனில் பந்தி சிறைக்கல் அவர்கள் உடனிருந்தார் ஊக்குவிப்பாளர்களின் Convenor திரு. கிறிஸ்துதாஸ் அவர்கள் அறிக்கை வாசித்தார். திரு. எட்வின்சன் அவர்கள் இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்களுக்கு நன்றிக் கூறினார். திரு.மரியதாஸ் அவர்கள் புதிதாக பொறுப்பேற்ற பேரருட்தந்தை சனில் பந்திசிறைக்கல் அவர்களை வரவேற்று வாழ்த்துரை வழங்கினார். இக்கூடுகையின் போது 2வது ஆய்வு அறிக்கையை ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் சமர்பித்தனர்

**ஜூன் மாத நிகழ்வுகள்**

ஜூன் 2 அன்று தலைமையாசிரியர்களின் கூடுகை மதியம் 2.30 மணிக்கு கல்லுவிளை மறைக்கல்வி நிலையத்தில் வைத்து நடைபெறும்.

ஜூன் 3 ஞாயிற்றுக்கிழமை அன்று புதிய மறைக்கல்வி வகுப்புகள் அனைத்து பங்குகளிலும் தொடங்கப்பட வேண்டும்.

அருட்தந்தை சனில் பந்திசிறக்கல்,
இயக்குநர்

| BIRTHDAYS OF REV FATHERS - June | | | |
|---|---|---|---|
| BIRTHDAYS | JUNE | | FEASTDAYS |
| Fr. Anil Raj Dominic | 02 | 01 | Fr. Justin Sutheesh |
| Fr.  Johnsilal Arackaparampil | 03 | | |
| Fr. Justin Cheruvelil | 04 | 13 | Fr. Antony Jose |
| Fr. Anoop Karingadu MCBS | 13 | | |
| Fr. Clement Rockey | 15 | 13 | Fr. Antony Chundelikkatt |
| Fr. Prince Puthenchira MCBS | 18 | | |
| Fr. Sajan Nettaponghu | 21 | 13 | Fr. Anto Prabin CMI |
| Fr. Reju Puthuparampil MCBS | 23 | | |
| Fr. Mijo Puthenpurayil | 25 | 13 | Fr. Antony Madapurackal CMI |

# சிறுமலர் MISSION LEAGUE



# மிஷன்லீக் இயக்கம்

**பொறுப்பாளர்கள் கூடுகை மற்றும் பொறுப்பு ஏற்றல் நிகழ்வு**

19.05.2018 அன்று காலை 10.30 மணியளவில் பொறுப்பாளர் கூடுகை நடைபெற்றது. அன்றைய கூட்டத்தில் புதிதாக பொறுப்பேற்ற அருட்தந்தை ஜாண் ஜோசப் அவர்களிடம் முன்னாள் இயக்குநர் தந்தை ஷோஜோ அவர்கள், மறைமாவட்ட நிதிக் காப்பாளர் பேரருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் முன்னிலையில் அனைத்து ஆவணங்களையும் கொடுத்து பொறுப்புகளை ஒப்படைக்க, புதிதாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட அருட்தந்தை அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டார். புதிய இயக்குநர் தந்தை அவர்களுக்கு முன்னாள் இயக்குநர் தந்தை நிர்வாகக்குழு மற்றும் தந்தையர்கள், உறுப்பினர்கள் கன்னியர்கள் அனைவர் சார்பிலும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

அருட்தந்தை ஷோஜோ

இயக்குநர்

---

## ACRCI ஆறாம் ஆண்டு கூடுகை

Association of Catholic Rehabilitation Centres of India (ACRCI) தேசிய ஆறாம் ஆண்டு கூடுகை தக்கலை சங்கமத்தில் மே 8 முதல் 10 வரை நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தொடங்கி வைத்து தொடக்க உரையாற்றினார். இவ்வமைப்பு தேசிய அளவில் பதிவு செய்யப்பட்ட கத்தோலிக்க மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான 330 சிறப்புப் பள்ளிகளின் கூட்டமைப்பு ஆகும். ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாநிலத்தில் வைத்து ஆண்டு கூடுகை நடைபெறும். குமரி மாவட்டத்திலுள்ள 11 பள்ளிகளுள் நமது மறைமாவட்ட 7 பள்ளிகளும் அடங்கும். 80 பள்ளி முதல்வர்கள் கலந்து கொண்டனர். அருட்தந்தை பைஜு CMI பொதுத்தலைவர், அருட்தந்தை தோமஸ் பெலிக்ஸ் இயக்குநர், அருட்தந்தை சனல் பந்திச்சிறக்கல் AIDACT இயக்குநர், அருட்சகோதரி றோஸ்லின் SABS பொருளர் மற்றும் பிரதிநிதி உறுப்பினர் ஆகியோர் இந்நிகழ்வை ஒருங்கிணைந்து நடத்தினர். இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை துணைத்தலைவர் மேதகு ஜோசுவா மார் இக்னேஷியஸ், குழித்துறை மறைமாவட்ட ஆயர் மேதகு ஜேரோம் தாஸ், மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

## கத்தோலிக்கப் பள்ளிகள்

10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மறைமாவட்ட கத்தோலிக்கப் பள்ளி மாணவர்கள் சிறந்த வெற்றிபெற்றனர். இவ்வெற்றி கல்விப்பணியில் மறைமாவட்ட சமுதாயத்தை ஒருபடி முன்னேற்ற செய்துள்ளது. இதற்காக உழைத்த தாளாளர்கள், முதல்வர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.


***Class X Results 2018***

| Name | Appeared | Passed | Highest |
|---|---|---|---|
| John Paul II Kulasekaram- SABS | 36 | 36 | 482 |
| St. Alphonsa, Nagercoil | 208 | 208 | 496 |
| St. Michael's, Kattathurai- FCC | 60 | 60 | 486 |
| Jaya Matha, Christurajapuram | 28 | 28 | 475 |
| Sacred Heart, Padanthalumoodu | 129 | 129 | 488 |
| APJM HSS, Soosaipuram | 72 | 72 | 487 |
| St. Joseph's School, Panpoli-MCBS | 119 | 119 | 490 |
| Carmel Matha, Kanyakumari-CMC | 109 | 104 | 483 |
| Carmel Jyothi, Colechal- CMC | 51 | 51 | 485 |
| Mount Carmel, Muzhucode- CMC | 62 | 62 | 483 |
| Mar M. Kavukatt Meml. High School, Varuthattu | 49 | 49 | 462 |
| St. James High School, Mankarai | 66 | 66 | 477 |
| Holy Family, Mukkootukal | 62 | 62 | 454 |
| Pulari Matric School, Puthur | 06 | 06 | 454 |
| St Joseph's Pilankalai-CMI | 60 | 59 | 433 |
| St. Mary's, Kaliyal- CMI | 129 | 127 | 470 |
| St Thomas, Netta- CMI | 16 | 16 | 464 |
| Holy Family HS Arukany | 27 | 27 | 445 |


***Class XII Results 2018***

| Name | Appeared | Passed | Highest |
|---|---|---|---|
| St. Alphonsa, Nagercoil | 314 | 313 | 1174 |
| Sacred Heart, Padanthalumoodu | 125 | 123 | 1145 |

| | | | |
|---|---|---|---|
| St. Joseph's Matric, Panpoli MCBS | 80 | 80 | 1140 |
| APJM HSS, Soosaipuram | 96 | 96 | 1134 |
| St. Mary's, Kaliyal CMI | 198 | 191 | 1129 |
| Carmel Matha, Kanyakumari CMC | 58 | 58 | 1040 |
| Carmel Jyothi, Colechal- CMC | 26 | 26 | 1069 |
| Holy Family, Mukkootukal | 69 | 69 | 1043 |



VINCENT-DE-PAUL
வின்செந்தியர்



# தக்கலை மத்திய சபை

**ஆண்டுவிழா**

தக்கலை மத்திய சபையின் 20 வது ஆண்டுவிழாவானது 20.05.2018 அன்று சுமார் 9.00 மணியளவில் முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலியுடன் ஆரம்பமானது. திருப்பலியினை அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் நிறைவேற்றினார்.திருப்பலி முடிந்தவுடன் விவிலிய பவனி ஆரம்பமாகி விழா மேடையில் நிறைவுற்று விவிலிய வணக்கம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆண்டுவிழா பொதுக்கூட்டமானது ஆரம்பமானது. இக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக தேசிய சபைத் தலைவர் சகோ.ஜாண்சன் வர்கீஸ் மற்றும் தேசிய கல்வி திட்ட அலுவலர் சகோ.பிரான்சிஸ் சுனித்தன் அவர்களும் கலந்து கொண்டனர்.

**பொதுக்கூட்டம்**

அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இறைவணக்கப் பாடலைத் தொடர்ந்து தலைவர் சகோ ஐயாத்துரை அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து சகோ எட்வின்சன் ஆண்டறிக்கை வாசித்தார். மூத்த துணைத்தலைவர் சகோ சவுந்தர் ராஜ், சிறப்பு விருந்தினர்களையும் விழா நாயகர்களையும் வாழ்த்திப் பேசினார். அருட்தந்தை ஜேம்ஸ், அருட்தந்தை ஜாண் ஜோசப், அருட்சகோ மகேஷ், மற்றும் சகோ. தேவராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நலத்திட்டம் மற்றும் பரிசுகளை வழங்கி, இந்தியத் தேசியத் தலைவர், சகோ. ஜாண்சன் வர்கீஸ் சிற்ப்புரை வழங்கினார். கடந்த ஆறு ஆண்டுகள் களியல் வட்டாரச் சபைத் தலைவராகப் பணியாற்றிய சகோ. ஜஸ்டஸ் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. வட்டார சபை சார்பில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இறுதியாக துணைத்தலைவர் சகோ. மணிவண்ணன் அவர்கள் நன்றி கூற இறுதி செபத்துடன் ஆண்டுவிழாக் கூட்டமானது நிறைவு பெற்றது. தொடர்ந்து அன்பின் விருந்து நடைபெற்றது. இதற்குரிய ஏற்பாடுகளை மத்திய சபையின் வழிகாட்டுதலில், மஞ்சாலுமூடு வட்டாரசபை மற்றும், முக்கூட்டுக்கல் கிளைச்சபை யினர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

ஷாஜன்
செய்தி தொடர்பாளர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## தக்கலை பிலாங்காலை மறைவட்டம்

**பிலாங்காலை**

தக்கலை பிலாங்காலை மறைவட்ட இளைஞர் இயக்க இரண்டாவது கூடுகையானது 06.05.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பிலாங்காலை புனித குழந்தை தெரசா ஆலயத்தில் வைத்து இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் தூய ஆவி பாடலுடன் ஆரம்பமானது. பிலாங்காலை உதவிபங்கு தந்தை ஆன்றோ அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இக்கூட்டத்திற்கு பிலாங்காலை, காட்டாத்துறை, நாகர்கோவில் ஆகிய பங்குகளிலிருந்து இளைஞர் இயக்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தை பார்வையிட மறைமாவட்ட பொறுப்பாளர்களான தலைவர் ஜினோ அவர்களும், செயலர் பபிஷா ஜூலிட் அவர்களும், துணைச் செயலர் ஜெசின் அவர்களும் வருகை தந்தனர். மறைவட்ட செயலரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இயக்குநர் தந்தை அவர்கள் பேசுகையில் ஒவ்வொரு பங்குகளிலும் உள்ள பொறுப்பாளர்கள் துடிப்புடன் செயலாற்ற வேண்டும். மறைவட்ட பொறுப்பாளர்கள் தொடர்ந்து ஒவ்வொரு பங்குகளுக்கும் சென்று பார்வையிட்டு அவர்களை முன்னேற்ற பாதையில் வழிநடத்த பல வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். இதன் மூலம் ஒருங்கிணைந்து நம் கிறிஸ்தவ விசுவாசத்தை நிலைநாட்ட முடியும் என்று கூறினார். மேலும் நம் அடிப்படை விசுவாசக் குறைவை நிவர்த்தி செய்ய இளைஞர்களுக்கு SUNDAY COLLEGE [DOCAT] என்ற சிறப்பு வகுப்பு தொடங்க வேண்டும் என்றும், அந்த வகுப்பை நடத்த வழிகாட்டிகளாக நம் இளைஞர்களையே தயார் படுத்த வேண்டும் என்றும் கூறினார். STREET PLAY [ALCHOCAL], WORKSHOP [DOCAT] இவ்விரு திட்டங்கள் செயல்படுத்த நம் மறைமாவட்டத்திலிருந்தே குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் மூலம் விழிப்புணர்வு வழங்க வேண்டும் என்று தந்தை அவர்களால் கூறப்பட்டது. மறைமாவட்ட தலைவர் ஜினோ அவர்கள் பேசுகையில், உயிருள்ள விசுவாசத்தை நிலைநாட்ட நாம் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். எனவே தலைவர்களாகிய நாம் முன்மாதிரியாக செயல்பட வேண்டும். நம் செயல்கள் மூலம் பிறரின் ஆர்வத்தை கிறிஸ்துவில் நாம் தூண்ட வேண்டும் என்று கூறினார். மறைமாவட்ட துணைச்செயலர் ஜெசின் அவர்கள், இளைஞர்களின்

திறமையை வெளிப்படுத்த TCYM ஒரு தளமாக செயல்பட்டு வருகின்றது. DOCAT மூலம் நாம் கற்றுக் கொண்டு பிறருக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்று பேசினார்.

**தீர்மானங்கள்**

எந்த ஒரு நிகழ்விலும் இயக்கத்தோடு இணைந்து இயக்குநர் தந்தை அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

மாதத்திற்கு ஒருமுறை மறைவட்ட கூடுகை நடத்த வேண்டும்.

மறைமாவட்ட நிகழ்வுகளில் ஒவ்வொரு பங்கு இளைஞர்களும் ஆர்வத்துடன் கலந்து கொள்ள வேண்டும்.

மறைவட்ட இளைஞர்கள் ஒற்றுமையுடன் கலந்து ஆலோசித்து, ஒவ்வொரு பங்குகளுக்கும் சென்று பார்வையிட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மறைமாவட்ட செயலர் பபிஷா நன்றி கூற இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

**பரைக்கோடு**

20-05-2018 அன்று பிலாங்காலை மறைவட்ட செயற் குழுவால் இளையோர் இயக்கமானது பார்வையிடப் பட்டது. செயலற்று கிடக்கும் இயக்கம் இனி முதல் செயல்படும் எனவும், DOCAT CAMP க்கு வருவோம் என உறுதி கொண்டனர்.

## ஆறுகாணி மறைவட்டம்

**நெட்டா**

13-05-2018 அன்று காலை 7 மணிக்கு காலைச் செபத்துடன் துவங்கிய திருப்பலியில் மறைமாவட்டக் குழு கலந்துக் கொண்டு 9 மணியளவில் இளைஞர் இயக்க கூட்டமானது செபத்துடன் ஆரம்பமானது. செயலரால் அறிக்கை வாசிக்கப்பட்டது. இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் DOCAT குறித்து விளக்கம் அளித்தார். ஆறுகாணி மறைவட்ட செயலராக ஷெறின் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். மறைமாவட்ட தலைவர் ஜினோ, துணைத்தலைவர் அபிமோள், செயலர் பபிஷா, துணைச்செயலர் ஜெசின், பொருளர் அஜீஷ் மற்றும் 23 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துக் கொண்டார்கள்.



மறைவட்ட செயலர் ஷெறின் நன்றிக் கூற இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டமானது நிறைவுபெற்றது.

**அணமுகம்**

13-05-2018 அன்று காலை 11.30 மணியளவில் தூயஆவி பாடலுடன் தொடங்கிய கூட்டத்தில் இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் DOCAT குறித்து விளக்கம் அளித்தார். தலைவர் ஜினோ ஒற்றுமை மற்றும் கூட்டத்தின் முக்கிய நோக்கங்கள் குறித்து பேசினார். பிரச்சனைகளின்

தீர்வு குறித்து துணைத்தலைவர் அபிமோள் பேசினார். கூட்டத்தின் செயல்பாடுகள் குறித்து செயலர் பபிஷாவால் விளக்கப்பட்டது. மனித நேயம் என்ற தலைப்பில் துணைச்செயலர் ஜெசின் விளக்கம் அளித்தார். கூட்டத்தில் மொத்தம் 8 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.மறைவட்ட துணைத்தலைவர் விபின் வில்சன் அவர்கள் நன்றி கூற இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டமானது நிறைவுபெற்றது.



## நித்திரவிளை மறைவட்டம்

**வாறுதட்டு**

06-05-2018 அன்று மறைமாவட்டக் குழுவால் இரண்டாவது சந்திப்பு காலை 10.30 மணியளவில் தூய ஆவி பாடலுடன் துவங்கியது. கூட்டத்தைத் தலைவர் ஜினோ அவர்கள் பார்வையிட்டு இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். துணைத்தலைவர் அபிமோள் இளையோரின் மேற்பார்வை என்ற தலைப்பில் சிறு விளக்கம் அளித்தார். மறைவட்ட தலைவர் ஜனலெட் நன்றிக் கூற இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

## சூசைபுரம் மறைவட்டம்

**கிள்ளியூர்**

சூசைபுரம் மறைவட்ட பொறுப்பாளர்கள் கூடுகையானது 18-05-2018 அன்று மாலை 4.00 மணியளவில் கிள்ளியூர் தேவ மாதா ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் செபத்துடன் துவங்கிய கூட்டத்தில் முக்கிய தீர்மானங்களாக ஒவ்வொரு பங்கு இளையோரை சந்திப்பது, இளையோரை ஊக்கப்படுத்துவது, DOCAT குறித்து விளக்கம் அளிப்பது, அனைத்து பங்குகளிலும் DOCAT விளம்பரப்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது. மறைமாவட்ட துணைத்தலைவர் ராஜேந்திர பாபு அவர்கள் நன்றிக் கூற இறுதி ஆசீர்வாதத்துடன் கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

**தக்காளிவிளை**

20-05-2018 அன்று சூசைபுரம் மறைவட்ட செயற்குழு கூட்டமானது காலை 8.45 மணியளவில் பங்குத்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. மறைமாவட்டத் துணைத்தலைவர் இராஜேந்திர பாபு, மறைவட்டத் தலைவர் ஸ்டார்வின், துணைத்தலைவர் சுஜிலெட், இணைச்செயலர் அஜித், பொருளர் சந்தோஷ் மற்றும் 5 இளையோர்களும், பங்கின் பிரதிநிதி திரு.சோனிக் ரீகன் ஆகியோர் கலந்துக் கொண்டார்கள். அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்று துவக்க

உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து இளையோர்கள் கலந்துரையாடல் நடைபெற்றது. இளையோர் இயக்கத்தின் நோக்கம், செயல்பாடுகள் மற்றும் DOCAT குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. சுமார் 10.30 மணியளவில் கூட்டமானது நிறைவு பெற்றது.

27-05-2018 அன்று காலை 9.00மணிக்கு தூயஆவி பாடலுடன் தொடங்கிய கூட்டத்தில் இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். பங்குத்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மறைமாவட்டத் தலைவர் ஜினோ இளையோரின் குறிக்கோளைக் குறித்து பேசினார். இயக்குநர் தந்தை DOCAT குறித்தும் அதன் பயன்கள் என்னவென்று உரையாற்றினார். பங்கேற்பு குறித்து மறைவட்ட தலைவர் ஸ்டார்வின் பேசினார். இயக்கத்திற்கு பொறுப்பாளர்கள் இல்லாததால் தேர்தல் நடைபெற்றது. ஷாஜி மோன் தலைவராகவும், ரெமிலா துணைத்தலைவராகவும், ஜெனிஷா சி.ஸி செயலராகவும், ஆன்றோ துணைச் செயலராகவும், ஜெனிஷா பொருளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. சோனிக் ரீகன் அவர்கள் நன்றிக்கூற இளைஞர் இயக்கப் பாடலுடன் கூட்டமானது நிறைவுபெற்றது.

## படந்தாலுமூடு மறைவட்டம்

### அண்ணிக்கரை

20-05-2018 அன்று காலை 9.30 மணியளவில் தூயஆவி பாடலுடன் ஆரம்பமான கூட்டத்தில் இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். ஆறு மாதக்காலமாக செயலற்றுக்கிடக்கும் இயக்கத்தை மறைமாவட்டத் தலைவர் ஜினோ, மறைவட்டத் தலைவர் ஆஸ்டின், மறைவட்டத் துணைத்தலைவர் ஜின்சி ஆகியோர் பார்வையிட்டனர். இயக்குநர் தந்தை பேசும் போது திறமையான இளைஞர்கள் முன்னுக்கு வர வேண்டும். பிரச்சனைகள் வரும் போது எவ்வாறு சந்திப்பது, இதற்காகவே தக்கலை மறைமாவட்ட இளையோருக்கென DOCAT தொடங்க இருப்பதை தெரிவித்தார். இயக்கத்திற்கு பொறுப்பாளர்கள் இல்லாததால் தேர்வு நடைப்பெற்றது. தலைவராக பிரபுலால், செயலராக சுஜின், பொருளராக ராகுல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வருங்காலங்களில் இயக்கத்தை நன்முறையில் செயல்படுத்துவோம் என உறுதிமொழி எடுத்தனர். இக்கூட்டத்தில் 8 உறுப்பினர்கள் கலந்துக்கொண்டார்கள். செயலர் சுஜின் நன்றிக் கூற இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டமானது இனிதே நிறைவுப்பெற்றது.

### படந்தாலுமூடு

20-05-2018 அன்று காலை 10.30 மணியளவில் தூயஆவி பாடலுடன் துவங்கிய கூட்டத்தை இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமை தாங்கினார். மறைவட்ட தலைவர் ஆஸ்டின் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மறைமாவட்ட தலைவர்

ஜினோ DOCAT குறித்து விளக்கம் அளித்தார். இயக்குநர் தந்தை பேசும் போது அர்ப்பணத்தோடு இறைவனை அறிந்து மற்றவர்க்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்றார். மறைவட்ட துணைச் செயலராக இருந்த ஜெசின் மறைமாவட்ட துணைச்செயலராக பொறுப்பேற்றதால் ரெஜிதா படந்தாலுமூடு, மறைவட்டத் துணைச்செயலராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இக்கூட்டத்தில் 19 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். மறைவட்டத் துணைத்தலைவர் ஜின்சி நன்றிக் கூற இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டமானது நிறைவுப்பெற்றது.

**தெற்றியோடு**

20-05-2018 அன்று காலை 11.30 மணியளவில் இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் செபத்துடன் துவங்கிய கூட்டத்தில் மறைமாவட்டத் துணைச்செயலர் ஜெசின் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அருட்தந்தை ஜினு பேசும் போது இயக்கத்தை பார்வையிட வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. மேலும் அடிக்கடி பார்வையிடுதல் வேண்டும் என்றுக் கூறினார். மறைமாவட்டத்தலைவர் ஜினோ பேசும் போது இளையோரின் கனவு எவ்வாறு இருக்க வேண்டும், தோல்விகளை எவ்வாறு சந்திக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறினார். இயக்குநர் தந்தை DOCAT குறித்து விளக்கம் அளித்தார். அதன் பின் DOCAT என்பது குறித்து விவாதங்கள் நடைபெற்றன. ஒவ்வொருவரும் அவரவர் கருத்தைக் கூறினார்கள். கடைசியில் DOCAT தொடங்க முழு சம்மதத்தை தெரிவித்தார்கள். கூட்டத்தில் 15 உறுப்பினர்கள் கலந்துக் கொண்டார்கள். மறைமாவட்டத் துணைச்செயலர் ஜெசின் நன்றி கூற இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

பபிஷா|செயலர்

---

## சீனாய் இறையியல் மையம்

சீனாய் இறையியல் மையத்தின் தொடக்க விழா மே 12 அன்று காலை 11.45 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இயேசுவின் தனித்தன்மை பற்றி சிறப்புரையாற்றினார். இயக்குநர் முனைவர் அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் வரவேற்க, சீனாய் இறையியல் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. தொடர்ந்து மதிய உணவும் வழங்கப் பட்டது.

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**இறந்த பின்பும் வாழ்க்கை...**

உடல் ஆரோக்கியத்தையும் மற்றும் உடல் உறுப்புதானத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் விதமாக கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் உடல் உறுப்புதானம் எனும்




விழிப்புணர்வு கருத்தரங்கு கல்லுவிளை அரங்கத்தில் மே மாதம் 19ஆம் தேதி நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார். முதல் அமர்வை தானம் அறக்கட்டளை இயக்குநரும் 175 முறைக்கு மேல் உதிரத்தை தானமாக வழங்கியவரும் 75க்கும் மேற்பட்ட புத்தகத்தின் ஆசிரியருமான அருட்தந்தை ஜெரி ரொசாரியோ அவர்கள், உடல் உறுப்புதானத்தில் தமிழ் நாட்டின் உதவி மற்றும் சட்டஅமைப்பு, தானத்தின் வகைகள் ஆகியவை பற்றி கலந்துரையாடல் வழியாக கருத்தரங்கை வழிநடத்தினார். இரண்டாவது அமர்வை கிட்னி பவுண்டேசன் தலைவர் அருட்தந்தை டேவிஸ் அவர்கள் ஆன்மீகத்தில் உடல் உறுப்புதானம் மற்றும் கொடுத்தலில் கிறிஸ்தவ சாட்சியம் எனும் தலைப்புகளில் கருத்தரங்கை வழிநடத்தினார். இதன் நிறைவு நிகழ்வு சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பசேரில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு சமூகபணி மையத்தின் இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பிதுரை கலந்து கொண்டு, இந்தநிகழ்வு தனித்துவமானது. இறைவன் தானமாக தந்த உடலை நாம் இன்னொருவருக்கு தானமாக வழங்குவோம் எனவும், தான் மட்டுமல்லாது தன்னுடைய பெற்றோரும் சகோதரர்களும் உடலை தானமாக வழங்குவதற்கு ஒப்பந்தம் அளித்ததையும், மக்களின் ஆரோக்கியம் சார்ந்த விழிப்புணர்வு நடத்துவதற்கு சேவை சங்கத்திற்கு தன்னுடைய பாராட்டுகளையும் தெரிவித்தார். இதில் தக்கலை மறைமாவட்ட பொருளாளர் பேரருட்தந்தை டென்சி அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். பின்பு தன்னுடைய கிட்னியை தானமாக வழங்கிய MIDS இயக்குநர் அருட்தந்தை பீட்டர் அவர்கள் தக்கலை மறைமாவட்டம் சார்பில் கௌரவிக்கப்பட்டர். தான் கிட்னியை தானமாக வழங்கிய அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். இந்தநிகழ்வில் கன்னியாகுமரி சமூக சேவை

சங்க துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப், தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்க இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், அலுவலகப் பணியாளர்கள், மறைமாவட்ட இளைஞர்கள், களப்பணியாளர்கள் மற்றும் சுயஉதவி குழு மகளிர் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

**தன்னார்வலர்கள்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் சமுதாயத்தில் ஆரோக்கியமான நிலை வளர தன்னார்வலர்களை ஊக்குவிக்கும் கருத்தரங்கு கல்லுவிளை KKSSS அரங்கத்தில் நடைபெற்றது, ஏப்ரல் மாதம் 22ம் தேதி தன்னார்வலர் பற்றிய கருத்தரங்கு கன்னியாகுமரி சமூகசேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. எல்லார் மனதிலும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும் ஆனால் வேடிக்கை பார்க்காமல் உதவி செய்பவரே தன்னார்வலர்கள் என்று பேசினார். முதல் நிகழ்வில் இன்றைய சூழ்நிலையில் தன்னார்வலர் தேவை எனும் தலைப்பில் திரு. ராஜசேகர் அவர்கள் பேசினார். அடுத்த நிகழ்வில் நலமில்லாத வாழ்வில் தன்னார்வலர்கள் எனும் தலைப்பில் திட்டஅலுவலர் திருமதி ஷீபா அவர்கள் கருத்தரங்கை வழங்கினார். இதில் சுமார் 20 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**SPARK 2018**

ஏழை மாணவர்களின் திறமையும் ஆங்கில கல்விதரத்தை உயர்த்தும் நோக்கில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் நடத்தப்படும் SPARK 2018¸ மாணவர்களுக்கான கோடைக்கால பயிற்சி முகாம் சங்கமத்தில் வைத்து SPARK 2018 எனும் தலைப்பில் மே மாதம் 13 முதல் 26 வரை 14 நாள்கள் நடைபெற்றது. மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் குத்துவிளக்கேற்றி முகாமினை துவங்கி வைத்தார். இதில் சுமார் 168 மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளனர். இம்முகாமில் சலேசியன் துறவற சபையிலிருந்து 3 அருட்சகோதரர்களும் 6 பேராசிரியர்களும் இணைந்து மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர். முகாம் காலையில் திருப்பலியுடன் துவங்கப்பட்டது. சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பசேரில் அவர்கள் எழுதிய Learn English Cheerfully புத்தகத்தை மையமாக வைத்து ஆங்கிலத்தில் தெளிவாக பேசவும் பிழையில்லாமல் எழுதவும் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கினர். மாலையில் மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுகின்ற விளையாட்டு மற்றும் கல்விப் பயிற்சிகள் வழங்கப் பட்டன. பேச்சு, ஆளுமை, தலைமைத்துவபண்பு ஆகியவை வளர்த்துவதற்க்கான வகுப்புக்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. Camp Fire, Trea-

sure hut போன்ற புதுமையான நிகழ்ச்சிகள் மாணவர்களை




மகிழ்ச்சியின் வெள்ளத்தில் ஆழ்த்தின. முகாமின் நிறைவுவிழா கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக சூசைபுரம் புனித அல்போன்சா கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் கலந்து கொண்டார். மாணவர்கள் தங்கள் மனதில் மறக்கமுடியாத நாட்களாக இம்முகாம் அமைந்ததாக அமைந்ததாக தெரி வித்தனர்.

அருட்தந்தை சஜி எலம்பசேரில்
இயக்குநர்

---



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**மது அடிமை மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும், குடும்ப ஆற்றுப்படுத்துதலும் நடைபெற்று வருகிறது. மது மற்றும் மனநோய்க்கு சிகிட்சை பெற்ற நோயாளிகள் நலமடைந்துள்ளனர். செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாட்களும் இவ்வலுவலகம் செயல்படுகிறது.

**திருமண தயாரிப்பு பயிற்சி**


ஏப்ரல் மாதம் நடைபெற்ற பயிற்சியில் 23 இளைஞர்கள் பங்கேற்றனர். பேரருட்தந்தையர்களாலும், ஆசிரியர்களாலும் பயிற்சி அளிக்கப்பட்டது. இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் தலைமையில் இப் பயிற்சி வகுப்புகள் நன்முறையில் தொடங்கப்பட்டன. ஒவ்வொரு பயிற்சியும் அருட்சகோதரி மேரி ஜோயிஸ், செல்வி சுதா மாலைக்கோடு ஆகியோரால் வழிநடத்தப்பட்டது. இப்பயிற்சியின் இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமை அன்று பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெற்றது.

**குறிப்பு**

பயிற்சியில் கலந்துக் கொள்ளும் இளைஞர்களின் பெற்றோர்களை பங்குதந்தையர்கள் அனுப்பி வைக்கவும். அடுத்த பயிற்சி ஜூன் 15.6.2018 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 17.06.2018 அன்று மாலை 4.00 மணிக்கு நிறைவு பெறும். பயிற்சி கட்டணம் ரூ. 750.

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்
இயக்குநர்

# அருட்சகோதரர்களிடமிருந்து...




எங்கள் விடுமுறைக் காலம் சிறப்பாக அமைய எங்களுக்காக இன்பச்சுற்றுலா, VPV (விசுவாசப் பயிற்சி விழா) அனைத்தையும் ஒருங்கிணைத்து தந்த மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும் அதற்காக எல்லா வித ஏற்பாடுகளையும் செய்து தந்த அனைத்து குருக்களுக்கும் குறிப்பாக அருட்தந்தை ஜோஷி மற்றும் ஜினு அவர்களுக்கும் அருட்சகோதரர்கள் அனைவர் பெயரில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அருட்சகோதரர்கள் அனைவரும் விடுமுறை நாட்கள் முடிந்து குருத்துவக் கல்லூரிகளுக்கு சென்றுள்ளனர்.

**களப்பணி**

இவ்வாண்டு களப்பணியாற்றும் 8 அருட்சகோதரர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட இடங்களுக்கு சென்றடைந்தனர். அவர்கள் தங்கள் பணிகளை சிறப்போடு செய்ய இறைவனை வேண்டுவதோடு அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புதிய கல்வியாண்டு**

இவ்வாண்டில் அருட்சகோதரர்கள் ஜீபின், சுனில், மற்றும் பிபின் ஆகியோர் தத்துவயியல் படிப்பிற்காக பெங்களூர், மங்கலப்புழா, உஜ்ஜன் ஆகிய குருத்துவக்கல்லூரிகளுக்கு சென்றுள்ளனர். அதைப்போன்று இறையியல் படிப்பிற்காக அருட்சகோதரர்கள் ஜோஸ், மகேஷ் ஆகியோர் வடவாதூர் மற்றும் சென்னை குருமடங்களில் சென்றுள்ளனர். அவர்களை நினைவுக் கூர்ந்து ஜெபிப்பதோடு அவர்களுக்கு வாழ்த்துக்களும் தெரிவிக்கிறோம்.

அருட்சகோதரர் அபிலாஷ் அவர்கள் தனது மெய்யியல் கல்வியை ரோமில் நிறைவு செய்து ஜூன் 30 அன்று மறைமாவட்டம் திரும்புகிறார். அவரது திருத்தொண்டர் அருட்பொழிவு ஜூலை 3 மாலை 5 மணிக்கு கிறிஸ்துராஜபுரம் ஆலயத்தில் வைத்து நடைபெற உள்ளது. தொடர்ந்து திருத்தொண்டர் கல்வியை வடவாதூர் உயர்குருமடத்தில் பயில உள்ளார்.

ரோபின் ஜோஸ்
அருட்சகோதரர் தலைவர்

## ஆசிரியர்களுக்கான இருநாள் கருத்தரங்கு

மறைமாவட்ட கல்வித்துறை சார்பில் மறைமாவட்ட பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான இருநாள் கருத்தரங்கு மே 15 மற்றும் 16 ஆகிய இருநாட்கள் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. பெரும்பாலான ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

# மறைவட்ட செய்திகள்




## நித்திரவிளை மறைவட்டம்

**முஞ்சிறை**

2017-2018 ஆம் ஆண்டின் விசுவாசப் பயிற்சி விழா முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் 07-05-2018 முதல் 11-05-2018 முடிய 5 நாட்கள் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. "இயேசு சாமி எங்களோட HERO" என்ற மையச் சிந்தனையின் அடிப்படையில் பயிற்சி நடைபெற்றது. 07-05-2018 அன்று காலை 8.30 மணியளவில் திருப்பலியுடன் ஆரம்பமானது. சுமார் 100 மாணவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர். பயிற்சியை அருட்சகோதரர் பிரின்ஸ் அவர்கள் வழி நடத்தினார். மூன்று குழுக்களாக மாணவர்கள் பிரிக்கப்பட்டு ஆடல், பாடல், இசை, விளையாட்டு, விசுவாசப்பயிற்சி வகுப்பு, போட்டிகள் என்ற அடிப்படையில் வகுப்புகள் ஒவ்வொரு நாளும் நடைப்பெற்றது. தேநீர் மற்றும் மதிய உணவு ஆகியவற்றை ஒவ்வொரு உறவியமாக செய்து மாணவர்களுக்கு ஊக்கமளித்தனர்.

**விசுவாசப் பேரணி**

பயிற்சியின் இறுதி நாளான வெள்ளிக்கிழமை மாணவர்களின் விசுவாசப் பயிற்சி விழா பேரணி நடைப்பெற்றது. ஆலயத்திலிருந்து புறப்பட்டு முஞ்சிறை சென்று மீண்டும் ஆலயம் வந்தடைந்தது பேரணி. பலூன்கள், பலவண்ண காகித அட்டை வசனங்கள் தொங்கவிடப்பட்ட மரக்கிளைகளைக் கரங்களில் ஏந்தி விசுவாச முழக்கங்கள் ஒலித்துக்கொண்டு காண்போர் கண்களையும் உள்ளத்தையும் கவரும் வகையில் புனிதர்கள் போல் வேடமணிந்து வலம் வந்தனர். இப்பயிற்சி வாயிலாக ஏராளமான இறைவார்த்தைகளை கற்று பயன்பெற்றனர். சிறப்பாக செயல்பட்ட குழுக்களுக்கு முதல், 2ஆம், 3ஆம் பரிசுகள் வழங்கப்பட்டது. இப்பயிற்சி விழா மிக அருமையாக நடைபெற ஊக்கப்படுத்திய பங்குத்தந்தை, அருட்சகோதரர், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி.

**திருப்பயணம்**

இப்பயிற்சியின் தொடர்ச்சியாக 14-05-2018, 15-05-2018 ஆகிய இருநாட்கள் பரணிங்கானம், குடமாளூர், மாந்நானம், எடத்துவா ஆகிய புனித தலங்களுக்குச் சென்று பயன்பெற்றதோடு அதன் வரலாற்றையும் அறிந்து கொண்டனர்.

**கிறிஸ்து அரசர் ஆலயம் கிறிஸ்துராஜபுரம்**

30.04.2018 முதல் 05.05.2018

முடிய ஆறு நாட்கள் விசுவாசப் பயிற்சி விழா நடைபெற்றது. அருட்தந்தை லின்ஸ்லால் அவர்கள் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றி விசுவாசப்பயிற்சியை துவங்கி வைத்தார்கள். காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை வகுப்புகள் நடைப்பெற்றன. அருட்சகோதரர் அஜின் அவர்கள் மாணவர்களை பலக் குழுக்களாகப் பிரித்து ஆடல், பாடல், இசை, விளையாட்டு வகுப்பு என்று உற்சாகமாக வழிநடத்தினார். உறவியங்கள் மாணவர்களுக்கு வேண்டிய மதிய உணவு தயார் செய்து வழங்கினர். இப்பயிற்சி வாயிலாக மாணவர்கள் புத்துணர்வும் புதுவாழ்வும் பெற்றனர். இறுதியில் விதவிதமான வண்ணங்களில் விசுவாசப் பேரணி நடைபெற்றது. வெற்றி பெற்ற குழுக்கள் பரிசுகள் பெற்றனர்.

**ஜெயமாதா ஆலயம் நித்திரவிளை**

30.04.2018 முதல் 05.05. 2018 முடிய ஆறுநாட்கள் விசுவாசப்பயிற்சி விழா “இயேசு சாமி எங்களோட HERO” என்ற மையசிந்தனையின் அடிப்படையில் நடைப்பெற்றது.காலை 8.30 மணிக்கு காலைத்தொழுகை, ஜெபமாலை, திருப்பலியுடன் ஆரம்பமாகி ஆடல், பாடல், விளையாட்டு, போட்டிகள் மற்றும் விசுவாசப் பயிற்சி வகுப்புகள் பங்குதந்தை அவர்கள் தலைமையில் அருட்சகோதரர் பிறின்ஸ் அவர்களின் வழிகாட்டுதலில் நடைப்பெற்றது. ஒவ்வொரு உறவியங்களும் விதவிதமான உணவுகள் பரிமாறி மாணவர்களை மகிழ்வித்தனர். இறுதிநாள் பல் வண்ணங்களில் தங்களை அலங்கரித்து விசுவாசப் பேரணி நடத்தினர். தொடர்ந்து 12.05.2018 அன்று இன்பச் சுற்றுலாவும் சென்று மகிழ்ந்தனர்.

**அர்ச்சிப்பு**

06.05.2018 அன்று ஜெயமாதா சமூக நலக்கூடம் மந்திரிப்பு மற்றும் திருப்பலி நடைபெற்றது. பேரருட்தந்தை சத்தியநேசன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி ஜெபித்து அர்ச்சிப்பு வழிபாடு நடத்தினர்.

**பிரிவு உபசார விழா**

27.05.2018 அன்று அருட்சகோதரி அமலா ASMI அவர்களின் பிரிவு உபசார விழா நடைப்பெற்றது. கருணை இல்லம் மற்றும் மறைக்கல்வி, மிஷன் லீக் ஆகிய இயக்கங்களிலும் மிகச்சிறப்பாக செயலாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**புனித சவேரியார் ஆலயம் வாறுதட்டு**

01.05.2018 முதல் 06.05.2018 முடிய ஏழுநாட்கள் விசுவாசப்பயிற்சி விழா நடைப்பெற்றது. தினமும் திருப்பலியுடன் காலையில் ஆரம்பமாகி மதிய உணவுடன் பயிற்சி வகுப்பு நிறைவுற்றது. "இயேசு சாமி எங்களோட HERO" என்ற மையசிந்தனை அடிப்படையில் பயிற்சிகள்

மிகச்சிறப்பாக நடைப்பெற்றது. அருட்சகோதரர் அஜீ அவர்கள் பயிற்சியை ஆடல், பாடலுடன் வழிநடத்தினார். இறுதி நாள் பேரணியுடன் முடிவுற பரிசுகளும் வழங்கப்பட்டன.

**அமல மரியா ஆலயம் சீனிவிளை**

01.05.2018 முதல் 06.05.2018 முடிய ஆறுநாட்கள் சீனிவிளை அமல மரியா ஆலயத்தில் விசுவாசப்பயிற்சி விழா நடைபெற்றது. பயிற்சியானது காலை திருப்பலியுடன் 8 மணிக்கு ஆரம்பித்து மதியம் 1 மணியளவில் மதிய உணவுடன் நிறைவடைந்தது. விசுவாசப் பயிற்சியை பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் சிறப்புத் திருப்பலியுடன் அருட்சகோதரர் அஜு அவர்கள் ஆடல் பாடல் விளையாட்டுடன் வழிநடத்தினார். பயிற்சியின் நிறைவில் விசுவாசப்பேரணி நடைப்பெற்றது. பரிசுகளும் வழங்கப்பட்டன.

**புனித அந்தோணியார் ஆலயம் வயலின்கரை**

30.04.2018 முதல் 06. 05.2018 முடிய ஏழுநாட்கள் விசுவாசப்பயிற்சி விழா “இயேசு சாமி எங்களோட HERO” என்ற மையச்சிந்தனையின் அடிப்படையில் நடந்தது.காலை 7.00 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகி மதியம் 12 மணி வரை நடைபெற்றது. பங்குதந்தை தலைமையில் அருட்சகோதரர் அவர்கள் பயிற்சியை வழிநடத்தினார். ஆடல், பாடல், வகுப்பு, போட்டிகள், விளையாட்டு என்று பல வடிவங்களில் நடைபெற இறுதிநாள் றாலியுடன் பரிசுகளும் வழங்கப்பட்டன.ஞாயிற்றுக்கிழமை மாணவர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

## சூசைபுரம் மறைவட்ட செய்திகள்

**சூசைபுரம் ஆலய திருவிழா**

இந்த வருட திருவிழாவானது ஏப்ரல் 31 அன்று மாலை 6.00 மணிக்கு திருக்கொடியேற்றத்துடன் திருப்பலி, செபமாலை மற்றும் புனித சூசையப்பர் நவநாளுடன் ஆரம்பமானது. திருவிழா நாட்களில் தினமொரு சிந்தனையில் திருப்பலியில் மறையுரை வழங்கப்பட்டது. முதல் நாள் “இறுமாப்பிற்கு மாற்று தாழ்ச்சி” என்ற சிந்தனையில் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களும், இரண்டாம் நாள் "கோபத்திற்கு மாற்று பொறுமை" என்னும் சிந்தனை அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் அவர்களும், மூன்றாம் நாள் "மோகத்திற்கு மாற்று கற்பு" என்னும் சிந்தனையில் அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்களும், நான்காம் நாள் "கஞ்சத்தனத்திற்கு மாற்று முறை" என்னும் சிந்தனையில் அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட் அவர்களும், ஐந்தாம் நாள் "உணவுண்ணார்களுக்கு மாற்று அளவுணவு" என்னும் சிந்தனையில் அருட்தந்தை லின்ஸ்லால் மங்கலத்து அவர்களும், மறையுரை வழங்கினார். ஐந்தாம் நாளன்று

திருப்பலிக்கு பின் ஆடம்பர நற்கருணை பவனி நடைபெற்றது. ஆறாம் நாள் முதல் திருவிருந்து வழங்கப்பட்டது. அன்றைய திருப்பலியில் "சோம்பலுக்கு மாற்று சுறுசுறுப்பு' என்னும் சிந்தனையில் அருட்தந்தை பிரின்டோ அவர்கள் மறையுரை வழங்கினார். மாலையில் ஜெபமாலை தேர்பவனியும் நடைபெற்றது. ஏழாம் நாளன்று புது குருவும் மண்ணின் மைந்தருமான அருட்தந்தை தோமஸ் ஜெபனேஷ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார் "பொறாமைக்கு மாற்று அன்பு' என்னும் சிந்தனையில் அருட்தந்தை ஷோஜோ அவர்கள் மறையுரை வழங்கினார். நிறைவு நாளன்று உறவின் விருந்தும் மாலையில் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழாவும் அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவின் அடுத்தநாளில் இறந்தவர்களுக்கான நினைவு திருப்பலியும் நடைப்பெற்றது.

**பாலப்பள்ளம்**

பாலப்பள்ளம் கிறுஸ்து அரசர் ஆலயத்தின் இறைமக்கள் 18 05.2018 முதல் 20.05.2018 வரை வேளாங்கண்ணிக்கு குடும்ப திருப்பயணம் சென்றனர். பங்குதந்தை பிரிண்டோ அவர்கள் உடனிருந்து சீரோ மலபார் திருப்பலி ஒப்புக் கொடுத்து அனைவருக்காகவும் ஜெபித்தார்.

**மாங்கரை**

19.05.2018 அன்று அலெக்ஸ் புத்தேட் அவர்கள் முயற்சியினால் குடும்ப அட்டை மற்றும் குடும்ப அட்டவணை தயார் செய்யப்பட்டது. 24.05.2018 அன்று அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட் அவர்கள் மாறுதலாக செல்ல, அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

**உணவு திருவிழா**

27.05.2018 அன்று இளைஞர்கள் சார்பாக உணவுத்திருவிழா நடைப்பெற்றது. பங்கிலுள்ள அனைத்து மக்களுக்கும் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது.

**கிள்ளியூர்**

கிள்ளியூர் தேவமாதா ஆலயத்தில் 19.05.2018 அன்று புதிய உறவியத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.அன்று புதிய கைக்காரர்கள் தேர்வும் நடைபெற்றது.

## <u>மஞ்சாலுமூடு மறைவட்ட செய்திகள்</u>

**முழுக்கோடு**

முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தில் விசுவாசப் பயிற்சி விழா 29.04.2018 முதல் 04.05 .2018 வரை நடைபெற்றது. இதில் அனைத்து மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துக் கொண்டார்கள். அ ரு ட் ச கோ த ர ர் க ள் வழிநடத்தினார்கள். பங்குதந்தை மற்றும். கன்னியர்கள் ஊக்கமளித்தார்கள். ஒவ்வொரு இயக்கங்களும் அனைவருக்கும் மதிய உணவு, தேநீர்

வழங்கினார்கள். பங்கில் உள்ள தாய்மார்கள் உணவு தயாரித்து கொடுத்தார்கள். 14.05.2018 அன்று சுற்றுலா சென்றார்கள்.

**பள்ளிக்கோணம்**

பள்ளிக்கோணம் திரு இருதய ஆலயத்தில் 01.05.2018 முதல் 05. 05.2018 வரை விவிலிய பயிற்சி விழா நடைப்பெற்றது. அருட்தந்தை ஜோசப் ஆனித்தோட்டம் அவர்கள் மற்றும் கன்னியர்கள் தலைமையில் அருட்சகோதரர்கள் வழிநடத்தினார்கள். மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துக் கொண்டார்கள்.

**மாறப்பாடி**

புனித தோமையார் ஆலயம் மாறப்பாடியில் விவிலிய பயிற்சி விழா 07.05.2018 முதல் 12.05. 2018 வரை நடைப்பெற்றது. அனைத்து மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள். பங்குதந்தை ஜோமோன் மற்றும் கன்னியர்கள் ஆக்கமும், ஊக்கமும் அழித்து வழிநடத்தினார்கள். அனைத்து நாட்களும் ஒவ்வொரு உறவியங்களும் மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கினார்கள். 19.05.2018 அன்று சுற்றுலா செல்லப்பட்டது.

**உறவிய ஆண்டுவிழா**

2வது உறவியமான புனித சூசையப்பர் உறவிய ஆண்டு விழாவானது கொண்டாடப்பட்டது. கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**முக்கூட்டுக்கல்**

முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் 04.05.2018 முதல் 08.05.2018 வரை விவிலிய பயிற்சி விழா நடைப்பெற்றது. பங்குதந்தை ஜோஸ் வயலில் , அருட்கன்னியர்கள் தலைமையில் அனைத்து மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துக்கொண்டார்கள். அனைத்து உறவியங்களும் மதிய உணவு, தேநீர் வழங்கினார். 15.05.2018 அன்று சுற்றுலா செல்லப்பட்டது.

**மஞ்சாலுமூடு**

மஞ்சாலுமூடு குழந்தை தெரசா ஆலயத்தில் 01.05.2018 முதல் 09.05.2018 வரை விவிலிய பயிற்சி விழா நடைபெற்றது. பங்குதந்தையின் வழிகாட்டலோடு கன்னியர்கள்,ஆசிரியர்கள்,மாணவ மாணவிகள் கலந்துக் கொண்டார்கள். அனைவருக்கும் பங்குமக்களால் தேநீர் வழங்கப்பட்டது.

**ஜெபமாலை திருவிழா**

மே 1 முதல் 31 வரை ஜெபமாலை திருவிழாவாக கொண்டாடப்பட்டது. மே 1 முதல் ஒவ்வொரு தினமும் மாலை 5 மணி முதல் குருசடியில் வைத்து ஜெபமாலை, புகழ்மாலை மற்றும் மறையுரை நடைப்பெற்று வருகிறது. இதன் நிறைவு விழாவான மே 31 ம் தேதி மாலை 5 மணியளவில் அருட்தந்தை ஜோஷி தோமஸ் இளம் குருமட இயக்குநர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். பின்

அனைவருக்கும் இரவுணவு வழங்கப்பட்டது. மறைவட்டத்தில் உள்ள அனைத்து அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் கலந்துக் கொண்டனர்.

**களியல்**

களியல் புனித மரியன்னை ஆலயத்தில் 01.05.2018 முதல் 07.05.2018 வரை விவிலிய பயிற்சி விழா நடைப்பெற்றது. பங்குதந்தை டினு அவர்கள் தொடங்கி வைத்தார்கள். கன்னியர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் கலந்துக் கொண்டார்கள். விவிலிய கண்காட்சி நடைப்பெற்றது. மதிய உணவு,தேநீர் பங்குமக்களால் வழங்கப்பட்டது.

**ஜெபமாலை பவனி**

20.05.2018 அன்று ஜெபமாலைப் பவனி நடைபெற்றது. அனைவரும் எரியும் மெழுகு திரியுடன் ஜெபமாலை சொல்லி பவனியாக கலந்துக் கொண்டார்கள். பின்னர் சேனம்கோடு பங்குதந்தை சுமேஷ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றினார்.

தகவல் சேகரிப்பு
திருமதி செலின் மேரி| திருமதி ஸ்னேகலதா| திருமதி ஹேமா

---

## மறைமாவட்ட அருட்பணிப் பேரவை

மறைமாவட்ட அருட்பணிப் பேரவை கூட்டம் மே 1 அன்று தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளையோர்களின் வாழ்வு மற்றும் ஆலயத்தில் அவர்களின் பங்கு பற்றி இணைய யுகத்தில் இளைஞர்கள் என்ற தலைப்பில் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தெளிவாக கருத்துரை வழங்கினார். தொடர்ந்து அதைப்பற்றிய விவாதங்கள் நடைபெற்றன. இது மறைமாவட்ட வளர்ச்சிக்கு பேருதவியாக அமையும்.

## மந்திரிப்பு மற்றும் அர்ச்சிப்பு

மஞ்சாலுமூடு சிறுமலர் மறைவட்ட ஆலயத்தில் புதிதாக கட்டப்பட்ட குருசடியின் மந்திரிப்பு மே 1 அன்று நடைபெற்றது. ஆயர் மந்திரித்து திருப்பலி நிறைவேற்றினார். மாறப்பாடி புனித தோமையார் ஆலயத்தில் கட்டப்பட்ட குருசடி மே 6 அன்று ஆயர் அவர்கள் மந்திரித்து திருப்பலி நிறைவேற்றினார். சேனங்கோடு லூர்து அன்னை ஆலயத்தில் புனரமைக்கப்பட்ட பலிபீடத்தை மே 10 அன்று மாலை 5.30 மணிக்கு ஆயர் அவர்கள் அர்சித்து வைத்தார். அத்துடன் ஆயத்த அறையும் (Sacristy) மந்திரிக்கப் பட்டது. இதற்காக உழைத்த அருட்தந்தை சுமேஷ் மற்றும் பங்குமக்களுக்கு வாழ்த்துக்கள்.



MANJALUMOODU, KURUSADI
BLESSING - 01.05.2018



TCYM, LEADERS TRAINING - 26.05.2018
Padanthalumoodu




ACRC, 6th NATIONAL SEMINAR - 08-10.05.2018
SANGAMAM




SINAI THEOLOGICAL INSTITUTE - FIRST BATCH




ORGAN DONATION WORKSHOP, KKSSS - 19.05.2018
KALLUVILAI

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570